# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ).
*************

**முறையீட்டு மனு எண் 335/2016/பே.2**

**ஆணை எண். 268 /2017/ நாள் –29–11–2017**

திரு. எஸ். கண்ணன்,
இந்திய குடியரசு கட்சி,
ஓமலூர் பேரூராட்சி,
ஓமலூர்,
சேலம் மாவட்டம் – 636 455. ––– முறையீட்டு மனுதாரர்.

செயல் அலுவலர்,
ஓமலூர் பேரூராட்சி,
சேலம் மாவட்டம். ––– எதிர் மனுதாரர்.

## ஆணை

சேலம் மாவட்டம், ஓமலூர் பேரூராட்சியை சேர்ந்த திரு எஸ் .கண்ணன், என்பவரின் 03.04.2016 ம் தேதியிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்திற்கு 25.04.2016 ல் பெறப்பட்டு முறையீட்டு மனு எண் 335/2016 ஆக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

முறையீட்டு மனுதாரர் தனது மனுவினை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளின் முறைமன்ற நடுவர் (மனு தாக்கல் வழிமுறை, விசாரணை மற்றும் இறுதி செய்தல்) விதிகள் 2015 விதி 6ல் கண்டுள்ளவாறு நீதிமன்ற வில்லைக் கட்டணம் ரூ 10/ க்கு ஒட்டப்பட்டு படிவம் 1 பூர்த்தி செய்து சமர்ப்பிக்கக் கோரி இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணை எண் 335/2016/பே.2/நாள் 29.04.2016ன்படி ஆணையிடப்பட்டது. ஆனால் முறையீட்டு மனுதாரர் தனது மனுவினை உரிய முறையில் இதுநாள் வரை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பிக்கவில்லை.

இருப்பினும் புகார் மனுவிற்கான விளக்க அறிக்கையினை சமர்ப்பிக்கக் கோரி இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணை எண் 335/2016/பே.2/நாள் 22.11.2016ன் மூலம் பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது.

பேரூராட்சி செயல் அலுவலர், ஓமலூர் தனது கடித எண் 112/2016/அ.2/நாள் 05.01.2017ல் மேற்படி புகார் மனுவிற்கான விளக்க அறிக்கையினை மின்னஞ்சல் மூலம் இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

செயல் அலுவலரின் விளக்க அறிக்கை பரிசீலிக்கப்பட்டது. விளக்க அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட விளக்கங்கள் தொடர்பாக கீழ்கண்ட கூடுதல் விவரங்களை சமர்ப்பிக்க இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணை எண 335/2016/பே.2/நாள 08.09.2017ல் ஆணையிடப்பட்டது.

1. பேரூராட்சியின் செவ்வாய் சந்தை கடை எண் 7க்கான நிலுவைத்தொகை ரூ.22,235/– ஐ ஏலதாரரும் முன்னாள் துணைத் தலைவருமான திரு அ.பிரகாஷ் என்பவரிடம் வசூக்கப்பட்டு வரவு வைக்கப்பட்ட விவரம்,

2. 29.02.2016ல் மேற்படி கடை எண் 7 ஏலம் எடுத்த திரு அ. பாலசுந்தரம் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் திட்ட கடை எண் 7 ஐ ஏலம் எடுத்த திரு அ. ரவிச்சந்திரன் ஆகிய இருவருக்கும் திரு அ. பிரகாஷ் (முன்னாள் துணைத்தலைவர் / முன்னாள் ஏலதாரர்) உறவு முறை உள்ளதா ? அவ்வாறெனில் விவரம்,

3. முன்னாள் ஏலதாரரான திரு அ. பிரகாஷ், மேற்படி கடைக்கு ஏலம் எடுத்த தொகையின் விவரம்,

4. தற்போது 29.02.2016ல் ஏலம் உறுதி செய்யப்பட்ட தொகை விவரம்,

போன்ற விவரங்களை இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பிக்கக் கோரி இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணை எண் 335/2016/பே.2/நாள் 08.09.2017ல் ஆணையிடப்பட்டது.

பேரூராட்சி செயல் அலுவலர், ஓமலூர் தனது கடித எண் ந.க.எண். 112/2016/அ.2/நாள் 15.09.2017ல் தனது கூடுதல் அறிக்கையினை கீழ்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.

சேலம் மாவட்டம், ஓமலூர் பேரூராட்சியில் செவ்வாய் சந்தைகடை வளாக கடை 7–ன் நிலுவைத் தொகை ரூ 22,235/–ஐ ஏலதாரரும் முன்னாள் துணைத் தலைவருமான திரு அபிரகாஷ் என்பவரிடமிருந்து கீழ்கண்டவாறு வசூலிக்கப்பட்டு பேரூராட்சி கணக்கில் வரவு வைக்கப்பட்டதாக தெரிவித்துள்ளார்.

| வ.எண். | ஆண்டு | செலுத்தவேண்டிய தொகை | செலுத்திய நாள் |
|---|---|---|---|
| 1. | 2013–14 | ரூ 7,311/– | 13.04.2016 |
| 2. | 2014–15 | 7,376 | 13.04.16 மற்றும் 12.09.2016 |
| 3 | 2015–16 | 7,548 | 28.09.2016 |
| மொத்தம் | | 22,235 | |

இப்பேரூராட்சியின் முன்னாள் துணைத்தலைவர் மற்றும் முன்னாள் ஏலதாரர் திரு அ.பிரகாஷ் என்பவருக்கு திரு அ. பாலசுந்தரம் (செவ்வாய் சந்தை வணிக வளாக கடை எண்

7ன் ஏலதாரர்) என்பவரும் திரு அ.ரவிச்சந்திரன் (சட்டமன்ற உறுப்பினர் திட்ட கடை எண் 7ன் ஏலதாரர்) என்பவரும் உடன் பிறந்த சகோதரர்கள் என தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இப்பேரூராட்சியின் முன்னாள் ஏலதாரர் திரு அ. பிரகாஷ் என்பவர் 2015-16ம் ஆண்டிற்கு செவ்வாய் சந்தை வளாக கடை எண் 78 ஐ ரூ 7,548/-க்கும் சட்டமன்ற உறுப்பினர் திட்ட கடை எண் 7-ஐ ரூ 7,400/-க்கும் ஏலம் எடுத்துள்ளதாக தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். இதன் மூலம் முன்னாள் துணைத் தலைவர் பயனடையும் வகையில் பேரூராட்சி நிர்வாகம் இருந்துள்ளதாக கருதும் நிலை எழுகிறது.

இப்பேரூராட்சி மூலம் 29.02.2016 ம் தேதியில் நடைபெற்ற ஏலத்தில் சட்டமன்ற உறுப்பினர் திட்ட கடை எண் 7க்கு அதிகபட்ச ஏலம் கோரிய தொகை ரூ 22,200/- ஓமலூர் பேரூராட்சி மன்ற தீர்மான எண் 314 (3) நாள் 03.03.2016 ன்படி அங்கீகரிக்கப்பட்டதாகவும் மேலும் செவ்வாய் சந்தை வளாக ஐடிஎஸ்எம்டி திட்ட கடை எண் 7க்கு அதிகபட்ச ஏலம் கோரிய தொகை ரூ 13,080/- ஓமலூர் பேரூராட்சி மன்ற தீர்மானம் எண் 315 (14) நாள் 03.03.201 6 ன்படி அங்கீகரிக்கப்பட்டு நாளது தேதிவரை உரிய நபர்களால் கடை நடத்தப்பட்டு வருவதாக தெரிவித்து மேற்படி பேரூராட்சி மன்ற தீர்மான நகல்களையும் இணைத்து சமர்ப்பித்துள்ளார்.

2013-14 முதல் 2015-16 முடிய மேற்படி பேரூராட்சி துணைத் தலைவர் திரு அ. பிரகாஷ் என்பவர் பேரூராட்சி சந்தைக்கடை எண் 7க்கான ஏலத்தில் கலந்து கொண்டு ஏலம் எடுத்துள்ளார். பேரூராட்சி துணைத் தலைவராக இருந்த ஒருவருக்கு பேரூராட்சியின் சந்தைக் கடை ஏலத்தில் கலந்து கொள்ளவும் ஏலம் எடுக்கவும் பேரூராட்சி செயல் அலுவலர் அரசு விதிமுறைகளின்படி எந்தவிதமான மறுப்பும் தெரிவித்ததாக தனது அறிக்கையில் தெரிவிக்கப்படவில்லை. மேலும் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் எவரும் பேரூராட்சி ஒப்பந்தக்காரராகவோ ஏலதாரராகவோ இருக்கக்கூடாது என்ற சட்ட விதிமுறைகள் இருந்தும், பேரூராட்சி செயல் அலுவலர் மேற்படி விதிகளை மீறி செயல்பட்டுள்ளது அவரின் அறிக்கையின் மூலம் புலனாகிறது. மேலும் திரு பிரகாஷ், முன்னாள் துணைத் தலைவர்2013-14 முதல் 2015-16 முடிய உள்ள காலங்களுக்கு செலுத்தவேண்டிய ஏலத் தொகையினை 13.04.2016, 12.09.2016 மற்றும் 28.09.2016 ஆகிய தேதிகளில் அதாவது முறைமன்ற நடுவ முறையீடு / நடவடிக்கைகளுக்கு பின்னரே செலுத்தியுள்ளதாக பேரூராட்சியின் செயல் அலுவலரது அறிக்கையின்மூலம் தெரியவருகிறது. ஒரு ஏலம் முடிவு செய்யப்பட்டவுடன் தொகை செலுத்திய பின்னரே உறுதி செய்யப்படவேண்டும் என்ற விதிமுறைகள் இருந்தும் அதனை மீறி பேரூராட்சி செயல் அலுவலர் செயல்பட்டுள்ளது முன்னாள் துணைத் தலைவருக்கு சாதமாகவே நடந்து கொண்டிருப்பது நன்கு புலனாகிறது. 2015-16ம் ஆண்டில் சந்தைக்கடை மற்றும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டில் கட்டப்பட்ட கடைகளை ஏலம் எடுத்தவர்கள் முன்னாள் துணைத் தலைவரின் சகோதரரகள் என தெரிவித்திருப்பதின் மூலம் பேரூராட்சி செயல் அலுவலர் முன்னாள் துணைத் தலைவருக்கு சாதகமான நிலையில் செயல்பட்டுள்ளார் என்பதும் புலனாகிறது. எனவே தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் பேருராட்சி ஒப்பந்தக்காரராகவோ ஏலதாரராகவோ இருக்கக்கூடாது என்ற விதியினை மீறியும், துணைத் தலைவருக்கு ஏல குத்தகை விட்டு அவ்வாறு விடப்பட்ட குத்தகைக்கான தொகையினை காலம் கடந்து முறையீட்டு மனுதாரர் புகார் மனுவினை சமர்ப்பித்தபின்னர்

வசூலித்தும், தொகையினை செலுத்தும் முன்னரே ஏலத்தினை உறுதி செய்து மன்ற தீர்மானம் பெற நடவடிக்கை எடுத்தமைக்கு சம்பந்தப்பட்ட பேரூராட்சி செயல் அலுவலரின் மீது துறை ரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ள பேரூராட்சிகளின் இயக்குநருக்கு பரிந்துரைத்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2017-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 29-ஆம் நாள் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

-//ஒப்பம்//-

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளின் முறைமன்ற நடுவர்**

**-//உத்திரவின்படி-அனுப்பப்படுகிறது//-**

செயலாளர்.

பெறுநர்

1.திரு எஸ். கண்ணன்,
இந்திய குடியரசுக் கட்சி,
ஓமலூர் பேரூராட்சி,
ஓமலூர் வட்டம்,
சேலம் மாவட்டம். (செயல் அலுவலர், ஓமலூர் மூலமாக)

2.பேரூராட்சிகளின் இயக்குநர்,
குறளகம்,
சென்னை.

3.செயல் அலுவலர்,
ஓமலூர் பேரூராட்சி,
சேலம் மாவட்டம்.